# மாகாணசபை ஊழியர் பதவிக்கு பயமில்லை

வடக்கு கிழக்கு மாகாணசபையில் பணிபுரியும் எந்தவொரு உத்தியோகஸ்தரும், ஊழியரும் பதவி நீக்கம் செய்யப்படமாட்டார்கள் என வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. எஸ், கணேசநாதன் அறிவித்துள்ளார். முன்னைய நிர்வாகத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணசபை இருந்த காலத்தில் மாகாண சபையின் திணைக்களங்களில் நியமனம் பெற்ற பலர் தமது வேலை பறிபோகலாம் என்ற அச்சத்தை போக்கு முகமாகவே மேற்படி தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)


பக்கங்கள் எட்டு    விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 ஒலி 68    வெள்ளி    13-04-1990    (பங்குனி 31)    ரமழான் 16


## 1990ஆம் ஆண்டு புதுவருடப் பிறப்பு

1. வருடப்பிறப்பு நேரம் 14-04-90 அதிகாலை 3 56 மணி
2. விசேட புண்ணிய காலம் 13-04-90 இரவு 11-56 மணி முதல் 14-04-90 காலை 7-56 மணி வரை
3. கைவிசேஷ நேரம் 14-04-90 காலை 8-04 மணி முதல் 8 52 வரை
4. மருத்துநீர் தேய்க்கும் நேரம் விசேட புண்ணியகால நேரத்துக்குள் மருத்து நீர் தேய்க்கலாம்
5. ஆடை நிறம் வெண்மஞ்சள்

—8ம் பக்கம் பார்க்க

## மாகாணசபை கூட்டத்திற்கு வரதர் வருவார் - அபுயூசுப்

## சட்ட விபரங்களை ஜனதிபதி ஆராய்கிறர் - ரஞ்சன்

திருமலையில் ஈ. பி. ஆர். எல், எப். மாகாண சபை கூட்டத்தை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மாகாண போக்குவரத்துத் துறை அமைச்சர் அபுயூசுப் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் நளின் செனிவரட்னவுடன் பேச்சுகள் நடத்தப்படும். கூட்டப்படவுள்ள மாகாண சபை கூட்டத்தில் வரதராஜப் பெருமாளும் கலந்து கொள்வார் என அபுயூசுப் கூறினர்.

எனினும் மாகாண சபை கூட்டம் கொழும்பிலேயே நடாத்தக் கூடியதாக இருக்கும் என கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் வடக்கு கிழக்கு மாகாண சபையை திருமலையில் அல்லது கொழும்பில் நடாத்துவது குறித்து சட்ட விபரங்கள் குறித்து ஜனதிபதி ஆராய்ந்து வருகின்றர் ஆளுநர் நளின் செனிவரட்னவும் விரிவான அறிக்கை ஒன்றை ஜனதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார் இது பற்றிய முடிவு விரைவில் எடுக்கப்படும் என்று

—8-ம் பக்கம் பார்க்க

# பிரபாகரன் - அமைச்சர் ஹமீத்

# இன்று யாழ்நகரில் சந்திப்பு

## வடக்கு கிழக்கு பாதுகாப்பு நிலை பற்றி நீதி அமைச்சரிடம் பிரபா வலியுறுத்துவார்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு- வே பிரபாகரனை இலங்கை அரசின் நீதியமைச்சர் ஜனப் ஏ சி எஸ் ஹமீத் இன்று காலை யாழ் நகரில் சந்திக்கவுள்ளார்.**

இன்று காலை 9 மணிக்கு விமானத்தில் வரும் ஏ. சி. எஸ். ஹமீத் 10 மணியளவில், யாழ் நகரில் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயா, செயலாளர் நாயகம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ் மாவட்டத் தளபதி பானு, யாழ்மாவட்ட மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

வடக்கு கிழக்கு பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் இச் சந்திப்பின்போது முக்கியமாக ஆராயப்படவுள்ளது தமிழ்ப் பகுதிகளில் சேவைபுரியும் சிங்கள பொலிஸாரின் அத்துமீறல்கள் குறித்துதிரு பிரபாகரன்

—8-ம் பக்கம் பார்க்க

## கோல்லப்பட்ட மகன் நினைவாக தந்தை தோடர் உண்ணுவிரதம்

கோண்டாவில் கிழக்கு செபஸ்தியார்வீதியைச்சேர்ந்த பூபாலசிங்கம் என்பவர் தொடர்ந்துநான்காவதுநாளாக உண்ணுவிரதம்மேற்கொண்டு வருகின்றர்.

இருபத்தியொரு வயதான தனது மகன் தேசிய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதின் ஞாபகார்த்தமாகவே இவர் இந்த உண்ணுவிரதத்தை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

—8-ம் பக்கம் பார்க்க

## பெண் பலி

நேற்றுக்காலை கச்சேரியடியில் இடம் பெற்ற மினிபஸ் விபத்தில் திருமதி சின்னம்மா கனகராஜா ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

இவர் வீதியை கடக்கமுயற்சித்தபோது மினிபஸ் அவரை மோதியது. மினிபஸ்ஸை விடுதலைப்புலிகள் தடுத்துவைத்துள்ளார்கள்.

## புத்தாண்டிற்கு முன்னேடி புடவைக்கடைக்குள்பட்டாசு

கடந்த புதன் இரவு வவுனியா நகரில் புத்தாண்டிற்கு முன்னேடியாக விளையாட்டுக்காக விட்ட பட்டாசு புடவைக்கடைக்குள் புகுந்தது இதனால்வவுனியாநகரில் முஸ்லிம் வர்த்தகர் மத்தியில் ஒருவித சச்சரவு ஏற்பட்டது, பின்னர்சமாதானமாக தீர்க்கப்பட்டது. புத்தாண்டினை முன்னிட்டு வவுனியா புடவைக்கடைகள் இரவு 9 மணிவரை திறந்திருக்கின்றது குறிப்பிடத்தக்கது. (11)

## நாளைய முரசொலி

★ புத்தாண்டு உங்களுககு எப்படி? (ராசி பலன்)

★ புத்தாண்டு 'நேரடி றிப்போட்

★ மற்றும் பல அம்சங்களுடனும்

அதிக பக்கங்களுடனும் புத்தாண்டு சிறப்பிதழாக மலருகிறது.

## மட்டு தபால் சேவை வேகம்

திருமலையில் இருந்து மட்டக்களப்புக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன்று ஐந்து மாதங்களின் பின் மட்டக்களப்புக்கு வந்துள்ளது. 1989 நவம்பரில் மட்டக்களப்பு கச்சேரியில் இருந்து திருமலை மேலதிக பதிவாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் உரிய விலாசத்திற்கு ஒப்படைக்கப்படாமல் ஐந்து மாதங்களின் பின் மீண்டும் மட்டக்களப்பு கச்சேரிக்கு இம் மாதம் 7ம் திகதி வந்தது கிழக்குப்பகுதி தபால் சேவை இந்த "வேகத்தில" நடைபெறுவதையிட்டு இங்கு பலரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (05)

## ராக்கிங் செய்யத் தடை

புதிய கல்வியாண்டுகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு வெளியே ராக்கிங் செய்வதை உடனடியாக நிறுத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாண

— 8-ம் பக்கம் பார்க்க

## க.பொ.த.உயர்தர பரீட்சை விண்ணப்ப இறுதித்திகதி மே14

1990 ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது

மே மாதம் 14 ஆம்திகதிக்கு முன்னர் இதற்குரிய விண்ணப்பங்களை இலங்கை பரீட்சைத்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மேலும் 76 பட்டதாரிகளுக்கு மே மாதம் ஆசிரிய நியமனம்

எதிர்வரும் மே மாதம் 4-ம் திகதி மேலும் 76 பேருக்கு பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. இதுவரை 274 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வடக்கு கிழக்கு மாகாணசபை ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழே மேற்படி நியமனம் வழங்கப்

—8-ம் பக்கம் பார்க்க

## ரமழான் சிந்தனைகள்

### நீர் அருந்த இஸ்லாம் கூறும் முறை

'ஒட்டகம் தண்ணீர் குடிப்பது போன்று ஒரே மூச்சில் ஒரே தடவையாக நீங்கள் தண்ணீர் குடிக்காதீர்கள்! எனினும், இரண்டு மூன்று தடவையாக (வெளியில் வாயை எடுத்து மூச்சை விட்டுக் குடியுங்கள். குடிக்கும்போது அல்லாஹ்வின் பெயரை சொல்லுங்கள் தண்ணீர் குடித்து முடிந்ததும் அல்லாஹ்வைப் புகழுங்கள்' என்று நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுரை கூறினார்கள்.

மேலும் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் 'லஞ்சம் வாங்குகின்றவரும் கொடுக்கின்றவரும் அல்லாஹ்வின் சாபத்துக்குள்ளாகின்றனர்.

'உங்களில் ஒருவர் ஒரு நோயாளியைக் காணச்சென்றால் அந்த நோயாளியின் நெற்றியில் அல்லது அவருடைய கைமீது தம் கையை வைத்து அவரது நிலை எப்படி என்று கேட்பதுதான் நோயாளியைச் சேமலாபம் விசாரிப்பதன் பூரணத்துவமாகும்' எனப் பெருமானார் (ஸல்) அறிவுரை நல்கினார்கள்.

## உல்லாசப் பயணிகளிடம் சிகிரியாவில் கொள்ளை

வடமத்திய மாகாணத்தில் உல்லாசப் பிரயாணிகளிடம் பொருட்கள் டொலர் எல்லாமாக 14 லட்சரூபா வழிப்பறி செய்யப்பட்டுள்ளது.

சிகிரியாவுக்கு அண்மையிலுள்ள ஒரு பிரபல்யமான உல்லாசப்பிரயாணிகள் கவர்ச்சி மையத்தைப் பார்க்கச்சென்றவிடத்திலேயே பெல்ஜியம், மேற்கு ஜேர்மன் நாடுகளைச் சேர்ந்த 10 பேர் கொள்ளையிடப்பட்டனர்.

ஐந்து வாகனத்தில் சென்ற இவர்கள் சிகிரியாக்குன்றிற்கு 10 மைல் தூரத்தில் நடுவீதியில் ஆயுதபாணிகளாகத் தோன்றிய கோஷ்டியாலேயே வழிப்பறி செய்யப்பட்டுள்ளது. (37)

## 180-ம் நாள் நினைவஞ்சலி



### வீரசிங்கர் ஜெயந்திரன்

(தொழில் நுட்ப உத்தியோகத்தர் கமநலசேவை திணைக்களம் யாழ் மாவட்டம்)

ஆண்டவன் படைப்பு 27.02.1966 — அரக்கன் அழிப்பு 16.10.1989

காற்றிலும் நின் பேச்சுக் கேட்கின்றோமே
கனவிலும் நின் முகத்தைக் காண்கின்றோமே
கூற்றுவனாய் ஒருவன் கொடுமை செய்து
புது மலரைப் பறித்த செயல் கண்டிரங்கி
மாற்றரும் கண்ணீரைப் பெருக்கி நின்று
மண் மீது ஏன் இந்தக்கதி உனக்கு நேர்ந்ததென்றார்
சேற்றிலே பூத்த விருகமலம் போன்ற
திரு விழிகள் ஒளியையுமே காண்கின்றோமே
ஆற்றியே இருப்பதற்கு வழியறியோம்
ஆலமுண்ட ஈசனடி சேர்ந்ததும் ஏன்?

''கோகுலம்''
கண்டிவீதி, கைதடி.

பாசமுள்ள
அக்கா, அப்பா, அம்மா

04141

# அன்னை பூபதி கணபதிப்பிள்ளை

அவர்களின்

# 2-வது நினைவஞ்சலி



போராடும் மறவரெலாம் காட்டினிலே!
போக்கிரிகள் கூட்டமெலாம் நாட்டினிலே!
நீரோடும் கண்களுடன் வீட்டினிலே;
நின்றிருந்தோம் எத்தனைநாள் வீதியிலே!
தேரோடும் மட்டுநகர்க் கோயிலிலே;
தேவதையே! நீயிருந்தாய் தீயினிலே!
ஊரோடு உயிர்கொளுத்தும் வேளையிலே!
உண்ணமல் நீயிறந்தாய் திவினிலே!

**சிவா றேடிங் கோ**
கண்டி வீதி
கிளிநொச்சி

## பாடுகள், வேதனைகள்

இன்று உலகக் கிறிஸ்தவர்கள் யேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகளின் பெரிய வெள்ளியைக் கொண்டாடுகின்றனர்.

யேசுநாதர் சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்ததினம் இன்றாகும்.

உலகில் முதற் புரட்சிக்கு வித்திட்டவரே யேசு கிறிஸ்துநாதர்தான்.

இன்று கடவுள் இல்லை என்று கூறும் கம்யூனிச வாதிகள் கூட யேசுவைக் கடவுள் என்று ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவரது போதனைகளை ஏற்றுக் கொள்கின்றனர்.

உலகின் முதற் கம்யூனிச வாதி கிறிஸ்துவே என்று வாதிப்போரும் உண்டு

"உன்னைப்போல் உன் அயலானை நேசி, உன்னிடம் இரண்டு இருந்தால் ஒன்றை இல்லாதவனுக்குக் கொடு" என்று போதித்தவர் யேசுநாதர்.

கிறிஸ்துவின் பாடுகள் இன்று எமது மக்களுக்கு ஒரு முன்மாதிரியாகும்.

அவரும் ஓர் துரோகியால் காட்டிக் கொடுக்கப்பட்டார்.

கசையால் அடிபட்டு, தலையில் முள்முடி சூட்டப்பட்டு சித்திரவதைகளை ஆட்சியாளர்களின் படையினரால் அனுபவித்தார்.

# இதயநாதம்

வெள்ளிக்கிழமை 13-04-1990

நல்வாக்கு

அழுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவார்கள்.

-பைபிள்

ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்

உலகின் புரட்சிகர இளைஞர்கள் அனுபவிக்கும் சித்திரவதைகளுக்கு இது முன்னோடியாகும்.

பாரச் சிலுவை சுமந்து காடு, மலை எல்லாம் உடல் முட்களால் கீறச் சென்றார் யேசு. எமது இளைஞர்கள் எத்தனை பேர் இதே வழியில் கவசவாகனங்களில் கட்டப்பட்டுத் தென்னங்கீற்றாய் தெருவெங்கும் இழுபட்டனர்.

கலண்டரைப்போல் ஆணியடித்துச் சிலுவையில் யேசுவைத் தாக்கிக் கொன்றனர்.

தலைகீழாகக் கட்டிய நிலையில் எத்தனை இளைஞர்கள் சிறையில் உயிர் விட்டனர்.

கிறிஸ்துவிற்கு ஒப்புக்காவது ஒரு விசாரணை நடந்தது.

ஆனால், இங்கு விசாரணையுமின்றி, எங்கே என்ற விலாசமுமின்றிக் காணமல் போனோர் எத்தனை.

பேர் சொல்லப் பிறந்தவனை, ஓர் மகனை யேசுவை வழியனுப்பி வைத்த அந்தத்தாய் மரியாளின் வேதனை எத்தகையது.

இன்று தமது பிள்ளைகளை விடுதலை விருட்சம் வேர்விட, குருதி நீர் விட விட்டுள்ள தாய்மார்கள் எத்தனை.

யேசுவின் பாடுகளின் போது எவரும் அவரைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளப் பின் நின்றபோது ஒரு பெண் "வேரோணிக்கா" முன்வந்து ஒரு துணியால் அவர் திருமுகத்தைத் துடைத்தாள்.

இன்று போராட்டத்தில் துணிவுடன் முன்வநது பங்களிக்கும் பெண்கள் எத்தனை

தமது மரண நேரத்தில் தமது எதிரிகளை மன்னித்தார் யேசு.

இன்று பழையன மறந்து ஓர் புது நட்புறவுடன் புதிய சகாப்தம் ஆரம்பமாவதற்குரிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

அன்று, கிறிஸ்து மூன்றும்நாள் உயிர்த்தார் எமக்கும் இப்பாடுகளிலிருந்து உயிர்ப்பு உண்டென நம்புவோமாக.

# கல்வாரிப் பயணத்தில் உனது பங்களிப்பு....?

உலக கிறிஸ்தவர்கள் இன்று கிறிஸ்துவின் திருப்பாடுகளின் 'பெரிய வெள்ளி'யை அனுஷ்டிக்கிறார்கள் இதனை முன்னிட்டு 'பாதுகாவலனில்' வெளியான கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

பிறப்பவரெல்லாம் இறக்க வேண்டும். இதுதான் உலக நியதி. ஆனால் இறப்பதற்காகவென்று பிறக்கின்றார் ஒருவர். அவர்தான் எம் பாவங்களைச் சுமந்து எமக்கு விடுதலையளித்த எம்பெருமான் இயேசுக் கிறிஸ்து. பிறக்கின்றவன் இப்படித்தான் வாழ வேண்டும் என்றல்லாமல் எப்படியும் வாழலாம் என்ற நியதியை வகுத்துக் கொண்டதனால் வந்த வினைதான் ஆதி முதல் (மனிதனல்) வந்த சாவு அந்தச் சாவு அன்றோடு மட்டும் நின்று விடவில்லை. அன்று தொட்டு இன்றுவரை நிழல் போல் எம்மைத் தொடர்ந்து கொண்டு தானிருக்கிறது மனிதன் மேல் பற்றிக்கொண்ட ரோவ தோஷங்களை அகற்றப்பவண்டும். அவனை ஆன்ம வழியில் நடத்திச்செல்ல வேண்டும் என்று பரமபிதா சித்தங் கொண்டார். அவரது திருச்சித்தம் நிறைவேற வேண்டும் என்பதற்காக தமது ஒரே பேறான மகனை மனித உருக்கொடுத்து இவ்வுலகிற்கு அனுப்பி வைக்கின்றார்.

பலரும் செய்த குற்றத்திற்காக ஒருவர் மாத்திரம் தண்டனையைப் பெறுவதென்றால் ...அதுவும் சிலுவை மரணத் தண்டனை. அந்த அவமான முள்ள சிலுவை மரணத்தண்டனையை அனுபவிக்க யார் தான் முன் வருவார்கள்? தம் உயிரை மாய்த்துக்கொள்ள யார் தான் விரும்புவார்கள்?

எந்தவொரு மனிதனும் இதனை ஏற்றுக்கொள்ள 'சுய நலம்" ஒரு போதும் அனுமதியளிக்காது. இப்படிச் சுய நலம் மிகுந்த இவ்வுலகை அநியாயங்களும், அக்கிரமங்


ச. பிரபாகரன்
உயிலங்குளம்

களும் விளைந்த இவ்வுலகை பாவஇருள் சூழ்ந்தஇவ்வுலகை மீட்க வேண்டும் என்ற கருத்திற்காக எல்லோருடைய பாவங்களையும் சுமப்பதற்காக முன் வருகின்றார் ஒருவர். அவர் தான் ஏழ்மையின் சாயல பூண்டு மனித உருவில் வந்த மாசற்ற செம்மறி இயேசுக்கிறிஸ்து. அந்த மாசற்ற செம்மறியான இயேசுவைத்தான் எமது சமூகம் குற்றவாளிக் கூண்டிலே ஒரு கைதியாக ஒரு குற்றவாளியாக முள்முடி தரிக்கப்பட்ட பரிகாச ராசனக நிறுத்தியிருக்கிறது. துன்புறுத்துதல்களுக்கு உள்ளாக்கப்படும் இயேசு உண்மையில் அவர் மாசற்றவர். துன்பப்படுவதற்கும் துன்புறுத்தப்படுவதற்கு மானவர் இவர் அல்ல என்று சான்று பகருவதற்குக்கூட யாருமேயில்லை. இயேசு கைவிடப்பட்டவராக காணப்படுகின்றார். மக்கள் ஆட்சியாளருக்கு அஞ்சினார்கள். ஆளுநர்கள் அதிகார (தொனியில்) வெறியில் நிறைந்திருந்தார்கள் மூப்பர்கள் தலைமைக் குருக்கள் மக்களைத் தூண்டிய வண்ணமாயிருந்தனர். கூப்பாடு போடும் மக்கள் கூட்டம் அவனைச் சிலுவையில் அறையும் என்று தீர்ப்பும் கூறிவிட்டனர்.

தொடர்கிறது கல்வாரிப் பயணம். பயணத்திலே பல தடைக்கற்கள். ஆனாலும் சில ஆறுதல் சந்திப்புக்கள். கால்கள் தள்ளாடுகின்றன. செந்நீர் தாரை வார்த்து ஒடுகின்றன. பாவத்தின் பழு அதிகரிக்கின்றது. ஆனால் பயணம் தடைப்படவில்லை. கல்வாரிப் பாதையில் கல்லும், முள்ளும் காடுமலையும் கசிந்துருகி நிற்கின்றது வெண்ணுடை இரத்தம் தோய்ந்த ஆடையாக மாறுகின்றது கால்கள் தோய்ந்து முன்னேறத் தேடுகின்றது. ஆனால் மறைநூல் வாரத்தைகள் நிறைவேறுவதற்காகப் பயணம் தொடர்கின்றது,

ஏய் மனிதா! உன்னால் அந்தக் காட்சியைக் காணமுடிகிறதா? இல்லை. நிச்சயம் உன்னால் காணமுடியாது. ஏனென்றால் அக்கண் உனது பார்வையைத் தடுத்துவிடுகின்றது. உன்னால் அந்தச் சம்பவத்தை நினைவு கூர முடிகிறதா? இல்லை. ஏனென்றால் உனது மனச்சாட்சி அதற்கு இடம் கொடுப்பதில்லை. உன்னால் புலம்பி அழ முடிகிறதா? இல்லை. ஏனென்றால் உனது இதயம் மரத்துப்போய் விட்டது. எனவே சிந்திப்பதற்கு உனக்கு இதுவே ஏற்றகாலம் தொடர்கின்ற கல்வாரிப் பயணத்தில் உனது பங்களிப்பு என்ன என்பதை நன்கு ஆழமாகச் சிந்தித்துப்பார் உதவிக்கரம் கொடுத்த சீமோனக நிற்கின்றாயா? அல்லது வெண் துகிலால் திருமுகம் துடைக்கப்பெற்ற வீரப்பெண்மணி வெரோணிக்காவாக நிற்கின்றாயா? அல்லது புலம்பி அழும் பெண்களில் ஒருவனக (ஒருத்தியாக) நிற்கின்றாயா?... இல்லை நீ ஒரு வேளை ஒன்றுமே அறியேன். எனக்கு இதில் பங்களிப்பு இல்லை. அது உங்கள் பாடு என்று கையை விரித்து ஒதுங்கி நின்ற பிலாத்துவாக மாறிவிட்டாயா...?

எனவே கல்வாரிப் பயணத்தில் உனது பங்களிப்பு என்ன என்பதை சிந்தித்து விவேகத்துடன் செயற்பட்டு தொடர்கின்ற பயணத்தில் வீரத்துடன் செல்ல இன்றே நீ புறப்படுவாயா?......




## "சிலுவை" என்கிற சிலிர்க்கும் "ஆயுதம்"!

உலக மாந்தர் முகங்களிலே
புன்னகை தவழ வேண்டும் என்பதற்காக,
எங்கள்
இதய வேந்தன் உடலினிலே
"புண்ணகைகள்" தவழ்ந்தன!

* *

சிந்தையைப் பிசைந்து நிற்கும்
உன்
சிலுவை யாத்திரை!
மனித
மந்தையில் மலிந்திருக்கும்
பாவ யாத்திரை!

இவற்றின் நடுவே
"முள் மகுடமே"
மணி மகுடமாக
உன்
தலைமீது சூடிய
"தனி மகுடம்"!

ஆணிகளே காணிக்கைகளாக
உன்
கைகளையும், கால்களையும் அலங்கரிக்க;
குருதி கசிந்தொழுகிக்
குவலயத்தைக் குளிப்பாட்ட;
மூச்சுக் காற்றை நீ
மூன்று நாட்களாய்த் தவிர்த்திருந்தாய்!

- பாரதிசீலன்

# விளையாட்டுச் செய்திகள்

## தலைமன்னாரில் 'வீனஸ்' முதலிடம்

தலைமன்னார் புனித லோறன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. அருட் திரு. பிரான்சிஸ் அடிகளார் குத்துவிளக்கேற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார். வித்தியாலய அதிபர் திரு. ஜே ஈ. ஏ. குலாஸ் அவர்கள் வித்தியாலயக் கொடியை ஏற்றிவைத்தார் பிரதம அதிதியாக மன்னார் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கலந்துகொண்டார், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் — பேசாலைக் கொத்தணி அதிபர் திரு ஏ. ஆர். சிறில், பேசாலைப் பங்குத் தந்தை அருட் திரு. ஜே, பி. தேவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். வீனஸ், ஜுபிற்றர் ஆகிய இல்லங்களுக்கு இடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வீனஸ் இல்லம் 412 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், ஜுபிற்றர் இல்லம் 380 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. விளையாட்டுச் செயலாளர் திரு. எஸ். ஜேடலிமா அவர்கள் நன்றியுரை வழங்கினார். (17)

## வைகிங்ஸ் சென்றேக்தகுதி

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தேசிய புதுவருட விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில், சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் யுத்காமல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற பந்தயத்தில், யுத்காமல் அணி மேலதிக நேரத்தில் ஒரு புள்ளியால் வெற்றி பெற்றது. வைகிங்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் யுத்காமல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற பந்தயத்தில், வைகிங்ஸ் அணி 28:4 என்ற புள்ளிகள் கணக்கில் அமோக வெற்றி பெற்றது. சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு திருமதி ஏ எவ் றூபசிங்கம், செல்வி மையுரு பிலிப்நேரிஸ் செல்வி எஸ். மெல்சியா ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள். எதிர்வரும் 15 ஆம் திகதி பி. ப 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் சென் றேக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வைக்கிங்ஸ் அணி ஆடவுள்ளது. (16)

## வவுனியாவில் புதுவருடப்போட்டி

தமிழ்-சிங்கள சித்திரைப்புதுவருட தினத்தன்று வவுனியா கலைமகள் சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும் இணைந்து நடாத்தும் 6-வது மாபெரும் விளையாட்டுப்போட்டி கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது 45 மைல் மரதன் சைக்கிள் ஓட்டப்போட்டி முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெறும், இவைதவிர சிறுவர், சிறுமியர், பெரியோர், சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் பங்கு பற்றக்கூடிய பலதரப்பட்ட நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர், (11)

## மத்தியஸ்தர் பயிற்சி முகாம்

இளம் விளையாட்டாளர்களிடையே பொதிந்து கிடக்கின்ற திறமையினை வெளிக்கொணருமுகமாகவும், மத்தியஸ்தர் பற்றாக்குறையினை போக்குமுகமாகவும் பருத்தித்துறை மாவட்ட உதை பந்தாட்ட லீக் மத்தியஸ்தர் பயிற்சி முகாமொன்று அமைக்க தீர்மானித்துள்ளது, இப்பயிற்சிவகுப்பில் சேரவிரும்பும் விளையாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்கள் விண்ணப்பிக்குமாறு மேற்படி உதைப்பந்தாட்ட லீக்கின் செயலாளர் திரு. சி. க, இராசேந்திரம் தெரிவித்துள்ளார்.

## மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி


தமிழ் சிங்களப் புத்தாண்டினை முன்னிட்டு காங்கேசன் துறை மாவட்டம் சாரணர் சங்க கிளைச்சங்கமும், வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் சனசமூக நிலையங்களின் சமாஜமும் இணைந்து மாபெரும் மாட்டு வண்டிற்சவாரிப் போட்டியினை 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சீராவலை கொல்லங்கலட்டி மைதானத்தில் நடாத்தவுள்ளனர். போட்டி A, B, C, என மூன்று குழுவாக நடைபெறும். திரு. நா போஜன் தலைமைதாங்குவார். (51)

## முரசொலி வெற்றிக்கிண்ண உதைப்பந்தாட்டப்போட்டி

சுதேசிய புதுவருட விழாவை முன்னிட்டு. முரசொலி ஸ்தாபனத்தின் அனுசரணையுடன், முரசொலி வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தப்படும் உதைப்பந்தாட்டப் போட்டியின் கால் இறுதி ஆட்டப் போட்டி கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது. முதற் போட்டியில் சென் மேரிஸ் நீலும் அணி, அதனை எதிர்த்து ஆடிய குருநகர் விளையாட்டு கழக 'ஏ' பிரிவு அணியை ஐந்துக்கு பூச்சியம் என்ற கோல்கள் கணக்கில் வெகு இலகுவாக தோற்கடித்தது' இரண்டாவது போட்டியில் குருநகர் விளையாட்டுக்கழக 'சீ' பிரிவு அணி, சென் நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை 3:1 என்ற கோல்கள் கணக்கில் வென்றது ஆட்டநேரம் முடிந்தபோது இரு அணிகளும் தலா ஒருகோலுடன் சம நிலையில் இருந்தன. அதன்பின் கொடுக்கப்பட்ட மேலதிக 10 நிமிட நேரத்தில் குருநகர் இரு கோல்களைப் போட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். இப்போட்டியில் சென் நீக்கிலஸ் அணி கோல் காப்பு வீரன் சொலமன் ஜெயக்கொடி, மெய்சிலிக்கத்தக்க விதத்தில் ''டைவ்'' செய்து கஷ்டமான பல பந்துக்களைத்தடுத்து பாராட்டைப் பெற்றார். இறுதி ஆட்டத்தில் சென்மேரிஸ் வெள்ளை அணி, சென் நீக்கிலஸ் ''ஏ'' விளையாட்டுக் கழக அணியை ''வாக் ஓவர்'' முறையில் வென்றது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகட்கு நடுவர்களாக, கிளிபேட் அந்தனிபபிள்ளை, கப்ரின் D, A. M, குணசிங்கம், ஏ. என். ராமநாதன் ஆகியோர் கடமையாற்றினார்கள். (16)

# நாம் எவரையும் ஏமாற்றவோ துரோகமிழைக்கவோ இல்லை

## எமக்கு நடந்தால் வாளாவிரோம் என்கிறார் தலைவர் பிரபா



''நாங்கள் எவரையும் ஏமாற்றியதோ துரோகமிழைத்ததோ இல்லை. அதே வேளை நாம் ஏமாற்றப்பட்டோ எமது நம்பிக்கைக்குத் துரோகமிழைத்தாலோ நாம் அதற்கு எதிராக இயங்குவோம். யாராவது எம்மீது நம்பிக்கை வைத்தால் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடப்போம்'' என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கததலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் ''ரைம்'' ஆங்கிலசஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்

அநேகரி நீங்கள் பிரேமதாஸவுடன் சமாதானம் பேசுவது ஒரு தந்திர நடவடிக்கையே எனக் கருதுகிறார்கள் எனக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

''தமிழர்களைப் பாதுகாப்பதற்கே தலையிடுவதாகக் கூறிக்கொண்டு வந்த இந்தியா பின்னர் போரை எமது மக்களுக்கு எதிராக முடுக்கிவிட்ட முறையை என்னால் மன்னிக்கவே முடியாது என்றும் தலைவர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இப்பேட்டியின் விபரம் இங்கு தரப்படுகின்றது.

கேள்வி; இந்தியாவுடன் உங்களை மோதவைத்தது எது?

பதில்: தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கென்றே இலங்கையில் தலையீடு செய்ததாக இந்தியா கூறியது. ஆனால், உண்மையில் தனது சொந்த நலன்களைப் பேணவே இந்தியா இங்கே வந்தது, எங்களது பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கோ, தீர்த்து வைப்பதற்கோ உண்மையான எந்தவொரு முயற்சியும் ஒருபோதும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தியா திட்டமிட்டே இலங்கையின் இன நெருக்கடியை மோசமாக்கியது. இலங்கையைத் தனது செல்வாக்கு வலயத்திற்குள் கொண்டுவருவதில் ஆதிக்க நிலைகொண்ட பங்கை வகிப்பதற்கேதுவாக (புலிகள் உட்படத் தமிழ்த் த்விரவாதிகளுக்கு ஆயுதங்களையும், பயிற்சிகளையும் வழங்கியதன் மூலமாக) இலங்கையை இந்தியா நிலைகுலைத்தது.

தமிழர்களைப் பாதுகாப்பதற்கே தலையிடுவதாகக் கூறிக்கொண்டுவந்த இந்தியா பின்னர் போரை எமது மக்களுக்கெதிராக முடுக்கிவிட்ட முறையை என்னால் மன்னிக்கவே முடியாது. போர் ஆரம்பித்த மூன்றாம் நாள் இந்தியாவுக்கு வேண்டுகோள் ஒன்றை நான் விடுத்தேன். அப்பாவிக் குடிமக்கள் இறப்பதால், தாக்குதலை நிறுத்துமாறு இந்தியாவை நான் கேட்டேன். ஆனால், இந்த வேண்டுகோளை பலவீனத்தின் அறிகுறியாகத் தவறான முறையில் எண்ணிக்கொண்டு எங்களைத் தங்களால் நசுக்கிவிட முடியும் என்ற நினைப்பில் தாக்குதலைத் தொடர்ந்து மேற்கொண்டது.

கேள்வி: ஆனால் ஐக்கிய இலங்கையையே இந்தியா தொடர்ச்சியாக ஆதரித்து வந்துள்ளது என்பது உண்மையில்லையா?

பதில்: இலங்கையில் பாதுகாவலன் தானே என உலகத்தை நம்ப வைப்பதற்கு இதை ஒரு சாட்டாக இந்தியா பயன்படுத்தியது. இந்த நிலைப்பாட்டை எடுத்ததன் மூலம், இந்தப் பிராந்தியத்தில் வேறு வல்லாதிக்க நாடுகள் தலையிடாதிருப்பதை இந்தியா உறுதிசெய்துகொண்டது.

கேள்வி: தனது சொந்த நலன்களை அடைவதற்காகவே இலங்கைத் தமிழ்ப் பிரச்சினையை இந்தியா பயன்படுத்திக் கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியும் ஆனால், இந்தியாவின் பயிற்சிகளையும், ஆயுதங்களையும் அனுகூலமாக எடுத்துக்கொண்டு அந்த நாட்டை நீங்களும் பயன்படுத்தவில்லையா?

பதில்: ஆம் நாமும் இந்தியாவைப் பயன்படுத்தினோம். இந்தியாவின் தந்திரோபாயத்தை நாம் அறிந்திருந்தோம். ஆனால், எங்களை இராணுவ ரீதியில் பலப்படுததிக் கொள்வதற்கு அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டோம்.

கேள்வி: உலகின் மூன்றாவது பெரிய இராணுவத்தை எதிர்ப்பதற்கான துணிச்சலை உங்களுக்குக் கொடுத்தது எது?

பதில்: இலங்கைப் பாதுகாப்புப் படைகளினால் கைது செய்யப்பட்ட எனது 12 பிரதேசத் தளபதிகளை விடுவித்துத்தர இந்தியா தவறியது அந்தத் தளபதிகள் சயனடடை விழுங்கிக் கொண்டபோது, அத் தற்கொலைகள் இந்திய இராணுவத்தை எதிர்கொள்வதற்கான மனவுறுதியை எனக்குக் கொடுத்தன. இது குறித்து எனது உயர்மட்ட சகாக்களில் சிலர் என்னை எச்சரிக்கை செய்தனர். அத்துடன் எவ்வளவு காலத்துக்குப் புலிகளால் நின்றுபிடிக்க முடியும் என்றும் வியநதனர். அவர்களுக்கு நான் வியட்நாம் உதாரணத்தை எடுத்துச் சொன்னேன். ஒரு சிறிய நாடு வல்லரசொன்றை எதிர்த்து மனவுறுதியுடனும், தியாகசிந்தையுடனும் போரிட முடியும். சண்டையிடுவதற்கு நான் தீர்மானித்தபோது வெற்றியா அல்லது தோல்வியா என்ற சிந்தனை குறித்து நான் அக்கறைப்படவில்லை. சண்டையிடுவதற்கான மனவலிமை இருக்கின்றதா, இல்லையா என்பதையே அனுமானித்துக் கொள்ளவேண்டும். தோல்வி அச்சம் காரணமாகத் தங்களது இலட்சியங்களைத் தங்களது உரிமைகளை மக்கள் கைவிடமுடியாது.

கேள்வி: இது விடயத்தில் இந்தியாவிற்கு ஒருபாடம் கிடைத்திருக்கிறதா?

பதில்: எவ்வளவு தான் சக்தி மிகு இராணுவ வல்லாதிக்க நாடாக இருந்தாலும் மக்களின் விருப்புக்கு எதிராக எதையும் திணிக்கமுடியாது.

கேள்வி: எந்த கெரில்லாபோர் முறை நுட்பம் உங்களுக்கு பெருமளவு உதவியாய் அமைந்தது?

பதில்: நிலக்கண்ணி வெடிகளை நாம் பெருமளவுக்குப் பயன்படுத்தினோம் அவை இந்தியர்களுக்கு பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தியது

கேள்வி: இந்திய இராணுவத்தின் பிரதான பலமும பலவீனங்களும் என நீங்கள் கருதிய அம்சங்கள் எவை?

பதில்: அவர்களது பாரிய மனித சக்தியே அவர்களது பலமும் பலவீனமும். எமக்கு இது பெரும் நெருக்கடிகளை தந்தது. எமது நடமாட்டத்தை கட்டுப்படுத்தியது. ஆனால், பெரும் எண்ணிக்கையில் அவர்கள் வந்ததன் காரணத்தால், பெரும் உயிரிழப்புகளையும் அவர்கள் சந்திகதனர். அத்துடன் இராணுவ தளபாடங்களை கொண்டுவருவதில் பெருமளவு பணத்தையும் சக்தியையும் நேரத்தையும் அவர்கள் விரயம் செய்தனர். இன்னொரு பிரதான பலவீனம் என்னவென்றால் இந்திய இராணுவத்துக்கு இலக்கு எதுவும் இருக்கவில்லை தாங்கள் போரிடுவதற்கான காரணம் என்னவென்று படைவீரர்களுக்குத் தெரியாது அவர்கள் குழப்பமடைந்திருந்தனர். தமிழர்களை பாதுகாக்க அவர்கள் வந்தனர். பின்னர் தமிழர்களை கொல்லவேண்டியேற்பட்டது.

கேள்வி: உங்களது மதிப்பீட்டின்படி புலிகளின் சொந்த பலமும்பலவீனங்களும் எவை?

பதில்: எமது அதீத நம்பிக்கையே எமது பலமும் பலவீனமும். சிலசமயங்களிலே, தப்பிச் செல்வதற்கு வழியே கிடையாத இடங்களில் இந்திய இராணுவத்தின் ரோந்துகளை தன்ாக்பாறேகுவது சாத்தியமற்ற துணிச்சல் காரியங்களில எமது போராளிகள் ஈடுபட்டார்கள். இதனால் எமக்கு உயிரிழப்புகள் ஏற்பட்டன. நாம் சில சந்தர்ப்பங்களில் எச்சரிக்கையின்றி செயற்பட்டோம். ஆனால் எமது அதீத நம்பிக்கை காரணமாக, எங்களது பையன்கள் சில வியக்கத்தக்க துணிச்சல்மிகு தாக்குதல்களையும் தொடுத்திருக்கிறார்கள்.

கேள்வி: இந்திய இராணுவத்துடனான போரிலே, சுமார் 6000 தமிழ் குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அந்த உயிரிழப்புகள் பெறுமதியானவையா?

பதில்: ஆம் எங்களது மக்களின் விடுதலையிலும் சுதந்திரத்திலும் எந்தவொரு சக்தியும் தலையீடு செய்ய நாம் அனுமதிக்கப் போவதில்லை என்பதை நாம் நிரூபித்துள்ளோம்

கேள்வி: ஆனால், நீங்கள் அடைந்த பலன்கள் எவை?

பதில்: நான் சுயநம்பிக்கை துணிச்சல் எனது மக்களின் ஆதரவுகள் ஆகியவற்றை பெற்றிருக்கின்றேன்.

கேள்வி. இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கச் செய்தது எது?

பதில்: இந்தியா எங்களுக்கு தமிழ் ஈழத்தைத் தரும் என எமது மக்கள் நினைத்தார்கள் ஆனால் பதிலாக இந்தியா உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டு எமது விருப்புகளுக்கு எதிராக செயற்பட்டது எனவே. நாம் இலங்கை அரசாங்கத்துடன் பேசித் தீர்வுக்கு வருவது சிறந்தது என எண்ணினோம். இதுதவிரவும் வெளிநாட்டுச் சக்தியொன்று தலையிட்டு எமது மக்கள் மீது ஆதிக்கம்

—8-ம் பக்கம் பார்க்க

# கடற்றெழிலாளர் ஒற்றுமை வளர்ந்தால் வளமான வாழ்வு

## டொமினிக் அறிவுரை

வடமராட்சிக் கடற்றெழிலாளர் சங்கக் கூட்டம் பருத்தித்துறையில் வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் விடுதலைப்புலிகளின் மக்கள்முன்னணி இணைப்பாளர் திரு குணம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. சூசை, வடமாகாண அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தலைவர் தமது உரையில், ''நீண்டகாலமாக வடமராட்சிப் பகுதி மீனவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிணக்குகளையும், அவற்றைத் தீர்ப்பதற்காக அறிமுகம் செய்துவைக்கப்பட்ட புதிய யாப்பையும் பற்றி தெளிவாகக் கூறினார்

திரு. ஸ்ரான்லி டொமினிக் பேசுகையில், கடந்த பல ஆண்டுகளாக இப் பகுதி மீனவர்கள் இராணுவ நடவடிக்கைகளால் எவ்விதம் பாதிக்கப்பட்டார்கள். என்றும் இக் காலப் பகுதியில் மீனவர்களுக்கிடையில் ஏற்பட்ட சிறிய பிரச்சினைகளுக்குத் தகுதியான சிவில் நிருவாகம் ஒன்று இல்லாததன் காரணத்தால் தீர்வுகள் காணமுடியாமல் இருந்ததையும் இதன் பயனாக இப் பிணக்குகள் விரிசல் அடைந்து தொழிலாளர்கள் தமக்குள் தாமே பகைமை உணர்வுகளைக் கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அந்நிய சக்திகளை வெளியேற்றி இலங்கைக் கடற்படையைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்பும் தொழிலாளர்கள் தம் வேற்றுமைகளைக் களைந்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு, தமக்குள் தீர்வு காணாமல் இருப்பதை மிகவேதனையுடன் எடுத்துக் கூறினார்.

மீனவர்களின் பிணக்குகளைத் தீர்ப்பதற்காகப் பல்வேறு புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்ட இந்த யாப்பை எல்லோரும் ஏற்றுக்கொள்ளல் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து புதிய யாப்பு வாசிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது. அவையினரால் எழுதப்பட்ட வினாக்களுக்கு வடமாகாண கடற்றெழிலாளர் மக்கள் முன்னணித் தலைவர் தம்பியண்ணாவும்,வடமராட்சிக் கடற்றெழிலாளர் சங்கப் பொறுப்பாளர் பாலாவும் பதிலளித்தனர்.

வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. சூசை தமதுரையில், இன்று நாம் வைக்கும் தீர்வு, தற்கால கட்டத்துக்கேற்ப மாற்றிமமைக்கப்பட்டதென்றும் மே .முதலாம் திகதி விடுதலைப்புலிகளின் கடற்றெழிலாளர் சங்கம் என்ற புதிய பெயரில் ஒரு சங்கம் அமைக்கப்படுமென்றும் கூறினார்,

வடமராட்சிப் பகுதியில் பிரச்சினைக்குரியதாகக் காணப்படும் ரோலர் மீன்பிடியை எக்காரணம் கொண்டும் முற்றுகத்தடை செய்யமாட்டோமென்றும், மாற்றீடாக ஆழ்கடலில் சென்று நவீன முறையில் மீன்பிடிக்கும் ரோலர் மீன்பிடியை மிகவிரைவில் அறிமுகம் செய்து வைப்போமென்றும் கூறினார். மிக வறுமை நிலையில் இருக்கும் மீனவ குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட பல குழுக்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு சிறிய படகுகளும் வேண்டிய மீன்பிடி உபகரணங்களும்விடுதலைப்புலிகள் வழங்க இருப்பதாகவும் கூறினார்

தொழிலாலர்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக திருவாளர்கள் அன்ரனிவின்சன் மரியநாயகம், கி. அமிர்தலிங்கம், க. இராசபுத்திரன் ஆகியோரைக் கொண்டகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து திரு. தம்பியண்ணா நன்றியுரை நிகழ்த்தினார் (39)

# சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி பெற்றோர் விபரம்

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை, சமூக சௌக்கிய பயிற்சி நிலையத்தில், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற''பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பயிலுநர்கள்'' பயிற்சி நெறியை முடித்துக் கொண்டு 26 பேர் வெளியேறி உள்ளனர்.

3 மாதம் நடைபெற்ற இப் பயிற்சிக்கான மூழுச்செலவையும் இங்கிலாந்திலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஏற்றிருந்தது. 11. 04. 90 இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது. சான்றிதழ் பெற்றோரின் பெயர் விபரம் பின்வருமாறு. க.ஜெகதீசன் (சாவகச்சேரி) க. புனிதகுமார் (கோண்டாவில்) ப. காந்தரூபன் (இயக்கச்சி) த. சுரேஸ்குமார் (சுழிபுரம்) ச. கோகுலவரதன் (நெடுந்தீவு) சி. அருட்செல்வன் (சாவகச்சேரி) ப சிவகுமார் (இளவாலை) க தியாகலிங்கம் (காரைநகர்) இ முருகானந்தன்(இணுவில்) சு. சிவனேசராசன் (பண்டத்தரிப்பு) சீ ஜீவராஜா(மூளாய்) ச பாஸ்கரன் (வடடுக்கோட்டை) ஜெ விவேகானந்தன் (யாழ்ப்பாணம்) சி. குணேசலிங்கம் (வல்வெட்டித்துறை) கந்தப்பு இளங்கோ (தருமபுரம்) வே. முகுந்தன் (புத்தூர்) இ. நந்தகுமார் (வன்னேரிக்குளம்) அ சாகீர் (கிண்ணியா) செ. உதயசீலன் (சாம்பல்தீவு) மா. மோகனக்குமாரன் (திருகோணமலை) க கிருபானந்தன் (திருகோணமலை) எஸ். ஹசன் (கிண்ணியா) செ. ரஞ்சன் (மட்டக்களப்பு) க. தினகரன் (ஓமந்தை) செ. ஆ. ஆசிம் (எறக்கலம்பிட்டி) சி சுப்பிரமணியம் (அடம்பன்) இப் ''பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பயிலுநர்கள்'', பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வெற்றிடமாகவுள்ள பிரதேசங்களுக்கு 18 04. 90 முதல் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

# ஆற்றலாளர் அரங்கு



யாழ் இந்துக் கல்லூரி மாணவன் தர்மலிங்கம் கிருஷ்ணகுமார் மிகவும் சந்தோஷமாகக் காணப்பட்டார். வெற்றியின் பெருமிதம் அவர் முகத்தில் நன்றாகத் தெரிந்தது. இவருடன் கதைத்த போது சந்தோஷமாக கூறத்தொடங்கினார். நான் 4ஏ எடுப்பேன் என்ற நம்பிக்கை இருந்தது. இன்னும் எவ்வளவோ படித்து சாதிக்க இருப்பதால் இதை நான் சாதனையாக நினைக்கவில்லை. நான் இயன்றவரை நன்றாகப்படிக்கவேண்டும் என்பது தான் என் பெற்றோரின் விருப்பம். எனக்கு பொறியியலாளராக வரவேண்டும் என்பதே இலட்சியம் கடந்தகாலப்பாதிப்பின்போது எனதுபுத்தங்கள் பாடக்குறிப்புக்கள் என்பன யாவும் எரிந்தபோது என்படிப்பும் அவ்வளவுதான் என நினைத்தேன் ஆனால் இழந்து விட்ட என் பாடக்குறிப்புக்களை மீண்டும் எழுதித் தந்து உதவிய என் நண்பர்களை நான்மறக்க முடியாது. உயர்தரத்திற்கு வந்த ஆரம்பத்தில் ஏற்பட்ட பாதிப்பு என்பதால் என்னால் சமாளிக்க முடிந்தது. என்னைப்பொறுத்தவரை பல வழிகளாலும் என் கல்வியைத் தொடர முடியாது பல விதசமீபகால அரசியல் பாதிப்புக்கள் ஏற்பட்டன (நான்விபரமாககூற விரும்பவில்லை) ஆனாலும் நான் தளரவில்லை. சமாளித்து கல்வியில் கவனம் செலுத்தினேன். என் சகோதர்கள் எனக்கு பாதுகாப்பை அளித்ததோடு உற்சாகமும் தந்தார்கள் நானும் சோர்வற்றும் படித்தேன். வெளி நாடு போவது பற்றி கூறுவதென்றால் எனக்கு போக விருப்பமில்லை கொழும்புபோன்றஎ இடங்களிலே எமக்கு இப்போ இடமோ இல்லாத போது வெளிநாட்டில்எம் நிலைமை எப்படி இருக்கும்? எனக்கு போக விருப்பம் இல்லை என்றாலும், என் பெற்றோர்க்கு அத்தகைய ஆர்வம் இருப்பின் அதை நான் செயற்படுத்துவேன். ஆனால் என் சேவையை மீண்டும் என் நாட்டிற்க்காகவே அளிப்பேன். நாட்டுப் பிரச்சனைகளால் எமது கல்வி முறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவைகளில் மாற்றங்களை எதிர்பார்க்கின்றேன்பல்கலைக்கழகம் செல்லும் வரை உள்ள இந்த இடைக்கால நாட்களில் கம்பியூட்டர், ஆங்கிலம் என்பவற்றை படிப்பதாக தீர்மானித்துள்ளேன் எனக்கு கலைத்துறையில்ஈடுபாடில்லை, மாணவர் தலைவனாகவும் உயர்தர மாணவர் மன்றத்தின் தலைவராகவும் இருந்தேன். இவர் தனது பாடசாலை, ஆசிரியர்களுக்கு தனது நன்றியைத்தெரிவித்துவிடைபெற்றார் இந்தசின்ன வயது சாதனையாளனை மேலும் சாதனைகள் படைக்க வேண்டி முரசொலி வாழ்த்துகின்றது.

# சைக்கிள் மாயமாய் மறைந்தது

பூட்டப்பட்ட சைக்கிள் மாயமாய் மறைந்த சம்பவமொன்று திருநெல்வேலியில் நேற்றும் முன் தினம் இடம்பெற்றது இவ்வாறு தனது சைக்கிளை பறிகொடுத்தவர் ரயில்வே பகுதி ஊழியரான சத்தியசீலன் என்பவராவார்.

மேற்படி நபர் கடைக்கு முன்பாக சைக்கிளை நிறுத்திவிட்டு தேநீர் அருந்தச் சென்றுள்ளார். மீண்டும் திரும்பி வந்து பார்த்தப் பொழுதே தமது சைக்கிள் களவாடப்பட்டுள்ளமையை அறியக் கூடியதாக இருந்தது. இப்பகுதியில் தொடர்ந்து சைக்கிள் திருட்டு அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (41)

# செய்தி மஞ்சரி

## ''கலைஞர்க்குரிய மதிப்பு''

சுவாமி சாந்தானந்தா ஜெயந்தி தினவிழாவும், இராமகிருஷ்ணலயநுண்கலைக்கல்லூரியின் ஆண்டுவிழாவும் திருநெல்வேலி இராமகிருஷ்ணலயத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாராய சுவாமிகளின் தலைமையில் ஆரம்பமாகிய இவ்விழாவில் 1989 ம் ஆண்டு வடஇலங்கை சங்கீதசபைப் பரீட்சையில்விசேடசித்தி பெற்ற மாணவர்களுக்கு சுவாமிகள் பரிசில்களை வழங்கினார்கள். நல்லைஆதீனமுதல்வர்தனது ஆசியுரையில் குரு அருள் துணைகொண்டு திரு. இரா. மகேந்திரசிங்கம் சமயத்துக்கும், கலைக்கும் ஆற்றிவரும் சேவை அளப்பரியது என்று கூறினார். 1990 ம் ஆண்டு ''சுவாமி சாந்தானந்தா கலைஞர்கள் கௌரவ விருது'' இம் முறை பிரபல மிருதங்கக்கலைஞராகிய சங்கீதரட்ணம் எஸ். மகேந்திரனுக்கும் பிரபல வயலின் கலைஞராகிய சங்கீத வித்துவான் (செல்வி) பாக்கியலக்ஷ்மி நடராஜாவுக்கும் வழங்கப்பட்டது. இவ்விருதுகளை நல்லை ஆதின முதல்வர் வழங்கினார். கலைஞர்களை; கௌரவித்துப் பேசிய நுண்கலைக்கல்லூரி இயக்குநர் திரு. இரா. மகேந்திரசிங்கம் தனதுரையில் இவ்விரு கலைஞர்களும் இராமகிருஷ்ணலயத்துக்கும், நாட்டுக்கும் வழங்கி வரும் கலைச்சேவை அளப்பரியது. கலை வளர வேண்டும் என்ற நோக்கில் சுயநலமின்றி இவ்விரு கலைஞர்களும் செயற்பட்டு வருகின்றார்கள். காலத்துக்கு காலம் கலைஞர்கள் அவர்கள் ஆற்றும் சேவைகளுக்காக கௌரவிக்கப்படுதல் வேண்டும். அப்பொழுது தான் அழிந்துவிடும் நிலையிலிருந்த எமது கலை கலாசாரம் உயிர் துடிப்புள்ளதாகும் என்று கூறினார் தொடர்ந்து இசைக்கலைமணி (செல்வி) கலைவாணி மாணிக்கம் அவர்களின் இசைக்கச்சேரி இடம் பெற்றது செல்வி பவதாரணி சண்முகலிங்கத்தின் நன்றியுடன் விழா முடிவுற்றது.

## மாணவர் ஊக்குவிப்பு

கல்வியில் ஆர்வம்மிக்க மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் போது அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டியது ஆசிரியரினதும், பெற்றோரினதும் கடமையாகும்''இவ்வாறுமட்டக்களப்புமாவட்டப்பிரதிக்கல்விப் பணிப்பாளர்திரு கு சோமசுந்தரம்கூறியுள்ளார். மட்டக்களப்பு பொது நூல் நிலையத்தில் நடைபெற்ற பரிசளிப்புவிழா ஒன்றில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## யாத்திரிகர் மீது சூடு

நாவலப்பிட்டி கினிக்கத்தேன வீதியில் மீபிட்டிய என்ற பகுதியில் சிவனொலிபாதமலைக்கு யாத்திரை செய்துகொண்டிருந்த வாகனத்தின் மீது இனந்தெரியாத கோஷ்டி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் காயமடைந்த இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். பொலிஸார் இது குறித்துக் துரிதவிசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## ரூ. 2 லட்சம் கொள்ளை

கிராண்ட்பாஸ் வீதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டுக்கதவை நள்ளிரவில் தட்டிய நான்குபேர் தம்மை இராணுவத்தினர் எனக்கூறி சுமார் 2 இலட்சம் பணம், நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இக்கொள்ளைச் சம்பவம் குறித்து கிராண்ட்பாஸ் பொலிஸார் பொறுப்பதிகாரி திரு. சபாரத்தினம் சாந்தகுமார் தீவிரபுலன் விசாரணை மேற்கொண்டுள்ளார்.

## வடக்கே வருகிறார்கள்

சமாதான யாத்திரை ஒன்றை மேற்கொண்டு நயினாதீவு உட்பட வடபகுதி ஆலயங்களைத் தரிசிக்கும் பொருட்டு பௌத்தபிக்கு பாலித்த தலைமையிலான யாத்திரிகர் குழு ஒன்றுநேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படவிருந்தது. கெத்தாராம இளைஞர் லீக் உறுப்பினர்கள் புதுக்கடை கிராமோதய மண்டலத் தலைவர் திரு. எஸ் செனரத்லால்வெல ஆகியோரும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர். இக்குழுவினர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம், நல்லூர் முருகன் ஆலயம் ஆகிய புனிதஸ்தலங்களையும் தரிசிப்பார்.

## வர்த்தகர் மீண்டும் வருகை

அக்கரைப்பற்றுப் பொலிஸ்பகுதியிலுள்ள அலையடிவேம்பு, கருங்கொடித்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடந்த இரு வருடங்களாக வட, கிழக்கிற்கு வெளியே வசித்து வந்த தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் மீண்டும் இங்கு வந்து வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சந்திரிகாவுக்குச் சங்கடம்

ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் அரசியல் குழுவின் கூட்டத்திற்கு கட்சியின் தலைவி திருமதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க அழைக்கப்பட்டு கட்சிக்கு எதிராக அவர் பத்திரிகை மூலம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் பற்றி விளக்கம் கோரப்படவுள்ளதாகக் கட்சியின் செயளாலர் திரு. வை. பி. சில்வா பத்திரிகையாளரிடம் தெரிவித்தார் கட்சி சம்பந்தப்பட்ட விடயங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் உடன் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இறைபக்தி அவசியம்

கல்வித்திணைக்களம் எப்போதும் எமக்குக் கைகொடுக்கும் என்ற எண்ணத்தை மறந்து நாமும் எமது பிள்ளைகளும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் முன்னேற திடசங்கற்பம் கொள்ள வேண்டும். அதற்கு இறைபக்தியும் பெரியாரைக்கனம் பண்ணலுமே வழிகாட்டலாக இருக்கவேண்டும்.'' என்று தலைமன்னார்துறை அ. த. க. பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு பேசிய மன்னார் பிரதேசகல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

# நெருப்புவெட்டு, நெருப்புவிலை ஊழியர் ஒருவரின் கருத்து இது

ஆசிரியர்
முரசொலி

ப. நோ. கூ. சங்கங்கள் பாவனையாளருக்குத்தான் உருவாக்கப்பட்டன. காரைநகர் ப. நோ. கூ சங்கமும் மக்களுக்குச் சேவைசெய்யும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றது நாட்டில் பல நெருக்கடிகள் ஏற்பட்டு பொருட்கள் தட்டுப்பாடான வேளையில் உணவுமுத்திரைச்குரிய பொருட்களை தட்டுப்பாடு இல்லாது மக்களுக்கு விநியோகம் செய்த பெருமை காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தைச் சாரும். ப. நோ. கூ. சங்கக்கிளைகளில் நெருப்புவெட்டு நடைபெறுவதாகக் கடிதம் எழுதியவர் அதனை நிரூபிக்க வேண்டும். இச்செயல் ப. நோ. கூ. சங்கத்தில் கடமை புரியும் ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும், சங்கத்திற்கும் அவப்பெயர் உண்டாக்கும் செயல். எக்கிளையில் இப்படியான நெருப்புவெட்டு நடை பெற்றதென சங்கநிர்வாகத்துக்கு முறையிட்டு நடவடிக்கை எடுத்திருக்கலாம். இதற்குத்தடையேதும் இல்லையே.

ச. ஆ. சோமசுந்தரம்
சங்கம்கூட்டுறவு ஊழியன்
காரைநகர் ப. நோ. கூ.

# 'போபாலும் ஈழமும்' மற்றொரு உதாரணம் இது

ஆசிரியர்
முரசொலி

இதயநாதம் பகுதியில் போபாலும் ஈழமும் எனும் தலைப்பில் பலதரப்பட்ட உதாரணங்களை நன்கு உணர்த்தியுள்ளீர்கள் நன்றி. இரண்டாம் உலக மகாயுத்தம் நடந்தகாலத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பிரபல வர்த்தகருக்குச் சொந்தமான பாய்க்கப்பல் (கப்பலின் பெயர் லக்ஷ்மிகோவிந்தா) பர்மா கடலில் ஓடிக்கொண்டிருந்த சமயம் ஜப்பானிய யுத்தக்கப்பலான நீர்மூழ்கிக்கப்பல் திடீரென வந்து பாய்க்கப்பலை நிர்மூலமாக்கியது இதனால் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மாலுமிகளில் ஒருசிலர் உயிரிழந்தனர். ஒருசிலர் உடைந்த கப்பலின் பலகைகள் மூலமாக பல நாட்களாக உயிருக்காக போராடி நீந்திக்கொண்டிருந்தார்கள். இதே சமயம் அவ்வழியால் வந்த பிரிட்டிஸ் அரசுக்கு சொந்தமான கப்பல், உயிருக்காக போராடித்தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீட்டெடுத்தார்கள். பின் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள் பல வருடங்கள் கழித்து இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்தபின் ஜப்பானிய அரசாங்கத்தினால் பாய்க்கப்பலின் உரிமையாளருக்குப் பல லட்சரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டது இது நடந்த உண்மைச்சம்பவமாகும். எனவே இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒரு காலத்தில் இந்திய அரசாங்கம் இந்தியப்படையினரின் அட்டூழியத்தால் ஏற்பட்ட விளைவுகளுக்கு தமிழீழ மக்களுக்கு நஷ்டஈடு கொடுத்துத்தான் ஆக வேண்டும். இதில் எந்தவித ஐயமும் இல்லை.

க. ஆ. வேல்
கற்கோவளம்
பருத்தித்துறை

பாதிப்படைந்த வடபகுதி

# புகையிரத நிலையங்கள் பல இன்னமும் திருத்தப்படவில்லை

வன்செயல்களினால் பாதிப்படைந்த வடபகுதி புகையிரத நிலையங்கள் திருத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இது வரை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்புகையிரதநிலையங்களுக்கு நிதியொதுக்கப் படுவது பற்றி ஆலோசனை நடத்தப்பட்ட போதும் இது வரை எது வித நிதியும் அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் வடபகுதி பிரயாணிகள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். அத்துடன் ஒரு சில ரயில் நிலையங்கள்முற்றாகச் சேத மடைந் துள்ளன. (03)

# அரசு பொருளாதார நெருக்கடி நிலையில்

அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்குகிறது. அதனால்தான் பல்வேறு வரிகளைவிதித்து அதன் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முனைகிறது என்று பாராளுமன்றத்தில் அரசாங்கம்மீது குற்றம் சாட்டப்பட்டது. ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு அனில்முனசிங்கமே இக்குற்றச்சாட்டை அரசுமீது சுமத்தினர்.

# சுழற்சிமுறை உண்ணாவிரதம்

அன்னை பூபதி ஞாபகார்த்த சுழற்சி முறையிலான உண்ணாவிரதம்நேற்று மூன்தினம்பருத்தித்துறை மருதடி முருகையன் ஆலய முன்றலில் ஆரம்பமாகியது.

இவ்வுண்ணாவிரதத்தில் பருத்தித்துறைப் பிரதேசங்களின் மக்கள் 19ம்திகதி புதன்கிழமை வரை தொடர்ச்சியாகக்கலந்து கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (39)

முல்லைத்தீவு மாவட்டத்தில்

# வீடமைப்பு விண்ணப்பம் இறுதித்திகதி மே - 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வீடமைப்பதற்கு நன்மை பெறுவோரின் பட்டியலில் இடம் பெற்றவர்கள் அதற்குரிய விண்ணப்பப் பத்திரத்தை எதிர்வரும் 20-ம் திகதிக்கு முன் அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாக தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தவர்கள் மே மாதம் 20-ம் திகதி கட்டிட வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. மு. க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற மாவட்ட புனரமைப்புக் கூட்ட அமைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது கண்டிப்பான நடைமுறை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## தையற்பயிற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து ஜனசக்தி உதவி பெறும் 20 யுவதிகளுக்குத் தையற் பயிற்சி வகுப்புகளைத் தொழில் திணைக்களம் நடாத்த முன்வந்துள்ளது.

ஒரு வருடகாலத் தையற் பயிற்சியின்பின் இவர்களுக்குத் தையற் பயிற்சி தராதரப் பத்திரம் வழங்கப்படும் என மட்டக்களப்பு மாவட்ட தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் முரசொலிக்குத் தெரிவித்தார். (05)

## மன்னார் நலன்புரிச் சங்கம்

மன்னார் நகர உதவி அரசாங்க அதிபர் அலுவல நலன்புரிச்சங்கக் கூட்டம் அண்மையில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 'உதவி அரசாங்க அதிபர் திரு.ரீ.இராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது) பின் வருவோர் புதிய உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:-திரு.ரீ. இராமலிங்கம் (உ.அ. அதிபர்) உப- தலைவர்:திரு. என்.சிவகுமாரவேலு (கிராமசேவக அலுவலர்) செயலாளர்:- ஜனாப்எஸ். இஸ்ஸதீன் (கிராம சேவை அலுவலர்), பொருளாளர்:- திரு. எம். கனகநாதன் (லிகிதர்) கணக்காய்வாளர்:- திரு. எஸ். தர்மரத்தினம்(பதவி நிலை உதவியாளர் ஐந்து பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (17)

## லியோ கழகம் வேண்டுகோள்

14ம், 15ம் திகதிகளில் மாணிப்பாய் மருதடி விநாயகர் கோவிலில் நடைபெறும் தேர், தீர்த்த திருவிழாக்களின் போது யாழ். பரி. யோவான் கல்லூரி லியோ கழகம் வடபிராந்திய புற்று நோயாளர் சங்கத்திற்கு நிதி சேர்க்கவுள்ளனர். இதற்கான மனமுவந்த உதவியை வழங்குமாறு அனைவரும் கேட்கப்படுகின்றனர். இந்த நிதி சேகரிப்பு உண்டியல் குலுக்கல் மூலம் இடம் பெறும்.

## உங்களுடையதா?

சித்தன்கேணியைச் சேர்ந்த திருச்செல்வம் பவானி என்பருடைய தேசிய அடையாள அட்டையும், பல்கலைக்கழக அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## வண்ணையில்

வண்ணை- சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் பிரமோதூத வருஷப்பிறப்பு உற்சவம் நாளை சனிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

# சுய தொழில் முயற்சி நிவாரணம் யாழ் செயலகம் வந்தது

சுயதொழில் முயற்சிக்கான நிவாரணத்திற்காக 100 லட்சம் ரூபா யாழ் செயலகத்தை வந்தடைந்துள்ளது. அடுத்த வாரத்தில் இருந்து இந்தநிவாரணக் கொடுப்பனவு வேலைகள் ஆரம்பமாகவுள்ளன. இது வரை 4000 ரூபா நிவாரணம் பெறுதவர்களுக்கு இந்த நிதி ஒதுக்கீடு மூலம் வழங்கப்படவுள்ளது.

மீளக்குடியமர்தல் நிவாரணத்திற்காகவும் இந்தியாவில் இருந்து திரும்பிவந்த அகதிகளுக்காகவும் 50 லட்சம் ரூபா யாழ் செயலகத்தை வந்தடைந்துள்ளது இதற்கான வேலைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (03)

# 'முரசொலி' செய்தியால் பொறிக்கிடங்கு மூடப்பட்டது

கோண்டாவில் ரயில் நிலைய மேடையில் நீண்ட காலமாக கவனிப்பாரற்று கிடந்த பாரிய கிடங்கு மண்போட்டு நிரப்பப்பட்டுள்ளது.

ரயில் பயணிகள் இக்கிடங்கில் விழுந்து, எழும்பி பல அசௌகரியங்களை அடைந்து வந்தது தொடர்பாக சிலதினங்களுக்கு முன்பு முரசொலியில் செய்தி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (41)

கிளிநொச்சியில்

# எரிபொருள் தட்டுப்பாடு; வாகனங்கள் வீதியில் தவம்

கிளிநொச்சி மாவட்டத்தில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இம் மாவட்டத்தில் கடந்த வாரத்தில் இருந்து எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வந்தது ஆயினும் பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையம் மட்டும் கட்டுப்பாட்டு முறையில் எரிபொருளை வழங்கி வந்தது.

தற்போது முற்றாக எரிபொருள் முடிந்து விட்டதால் இப்பகுதி போக்குவரத்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் தனியார் வாகனங்களும் எரிபொருள் இல்லாமல் ஆங்காங்கே தெருவில் நிற்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. (35)

## சுவையான செய்திகள்

### கமிஷன் மட்டும் போதும்

டெல்லியில் ஒரு சலவைக்காரர் பெயர் குப்தா, இவரது தொழில் என்ன தெரியுமா? பழைய கிழிந்த ரூபாய் நோட்டுக்களை வாங்கிக்கொண்டு நல்ல நோட்டு கொடுப்பதுதான். கொமிஷன் நூறு ரூபாய்க்கு பத்து ரூபாய். தினமும் இவரது வருமானம் எவ்வளவு தெரியுமா? இருபதினாயிரம் ரூபா.

### பாவம் இந்தக் கணவன்மார்

மத்திய பிரதேசத்தில் பொலிசாரிடம் ஒரு வித்தியாசமான கோரிக்கை வந்தது தனி பொலிஸ் ஸ்டேஷன் அமைத்துத்தரக் கோரி. யாருக்காக? மனைவிமார்களால் கொடுமைகளுக்கு ஆளாகும் கணவன்மார்களைப் பாதுகாக்கவும், நடவடிக்கையெடுக்கவும் தான் இக் கோரிக்கை. இப்போதுள்ள பொலிஸ் ஸ்டேஷன்களில் இத்தகைய புகார்களைக் கண்டுகொள்வதே இல்லையாம்.

### பணம் செய்யும் வேலை இது

ராஜஸ்தான் மாநிலத்தில் திடீரென குருடர்கள் பார்வை பெற்றனர். செவிடர்கள் ஒலி அறிந்தார்கள், என்ன அதிசயம் இது? ஒன்றுமில்லை அரசு அதிகாரிகளின் உதவியால் ஒரு தேச விரோதக் கும்பல் குருடர்களுக்கும், செவிடர்களுக்கும் "இவர்கள் ஊனமற்றவர்கள்" என்று போலிச் சான்றிதழ் வழங்கியது இதை வைத்துக்கொண்டு கார் ஓட்டும் லைசன்ஸ் பெற அவர்கள் முயன்றனர் ஆனால் பாவம் அவர்கள் லைசன்ஸ் வழங்குவதற்கு முன்னாலேயே அவர்களது 'தண்டவாளங்கள்' அகப்பட்டுவிட்டன.

புத்தாண்டில் ஒளியூட்டும் தேசிய தீபம்போல் புதுவாழ்வு தர உங்களை அழைக்கின்றது

# இலங்கை வங்கி-நம் தேசிய வங்கி



சோலைக்குயில் கூவுமொலி காதில் விழ
வாலைக் குமரியர் ஊஞ்சலாடி அகமகிழ
பட்டாசும் வாணவேடிக்கைகளும் கலகலப்பூட்ட மற்றுமொரு
சித்திரைப் புத்தாண்டு மலரவுள்ளது

தேசிய முன்னேற்றத்துக்கு ஒளியூட்டி
வழி காட்டும் தீபமான இலங்கை வங்கி
இந்த மகிழ்ச்சிகரமான வேளையை உங்களுடன்
பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகின்றது

எதிர் வரும் 1990 சித்திரை மாதம் 14ந் திகதி சனிக்கிழமை புதுவருடத்தை முன்னிட்டு எமது வடபிராந்திய வங்கிக்கிளைகள்

## மு. பகல் 10 மணி தொடக்கம் ந.பகல் 12 மணி வரை

சுபமுகூர்த்த பரிமாறல்களுக்காகத் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

அன்றையதினம் சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு விசேட சலுகையாக இந்தச் சான்றிதழ்களுக்கு அதிகரித்த வட்டி வழங்கப்படும்,

## வங்கிவழங்கும் விசேடப் புத்தாண்டுப் பரிசுகள்

★ கொள்வனவு செய்யப்படும் 6மாத, 12மாத முதிர்ச்சியுடைய சேமிப்புச் சான்றிதழ்களுக்கு முறையே 15.05% 16.28% வருடாந்த வட்டியாக வழங்கப்படும்

★ சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்வோருக்கு வங்கியின் சார்பாக கைவிசேஷம் வழங்கப்படும்.

சேமிப்புச் சான்றிதழ்களின் கொள்வனவு விபரங்கள்

| சான்றிதழின் பெறுமதி | நீங்கள் செலுத்த வேண்டிய தொகை (6 மாதமாயின்) | நீங்கள் செலுத்த வேண்டிய தொகை (1 வருடமாயின்) |
|---|---|---|
| ரூபா. 200/- - | 186/- - | 172/- - |
| ரூபா. 500/- - | 465/- - | 430/- - |
| ரூபா. 1000/- - | 930/- - | 860/- - |
| ரூபா. 5000/- - | 4650/- - | 4300/- - |
| ரூபா. 10,000/- - | 9300/- - | 8600/- - |
| ரூபா. 25,000/- - | 23250/- - | 21500/- - |

சேமிப்புச் சான்றிதழ்களுக்கான அதிகரித்த வட்டி வீதம் 4-5-1990 வரை அமுலில் இருக்கும், என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலரும் புத்தாண்டில் நாட்டிலே அமைதியும் சமாதானமும் நிலை பெற்றுச் சுபீட்சம் பெருக வேண்டுமெனவும் இல்லம் தோறும் மகிழ்ச்சி பொங்க வேண்டுமெனவும் இலங்கை வங்கி வாழ்த்துகின்றது.

**இலங்கை வங்கி - தேசத்தின் வங்கியாளர்**

0414 5

★ இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்க

# வவுனியா மாவட்டத்தில் வீடமைப்பு கடன்

பதினைந்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு கடன் பெற விரும்புபவர்கள் உடனடியாக தமது பெயர்களை பதிவு செய்தல் வேண்டும். இம் மாதம் 30 ம் திகதிக்கு முன்பு அதற்குரிய விண்ணப்ப பத்திர முடிவு திகதி யாகும் என வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின்முகாமையாளர்திரு.எஸ். சாந்தலிங்கம் முரசொலிக்கு தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் இரு வகை திட்டம் அமுல் படுத்தப்படவுள்ளது. அவை கிராமிய உப வீடமைப்புத் திட்டம்,நகர உப வீடமைப்புத் திட்டம் ஆகும்.

தேசிய வீடமைப்பு இலாகா அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அல்லது புனர் வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழே,வீடமைப்பு நன்மை பெற்றவர்கள் இக் கடனை ப் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் எனவும் திரு. சாந்தலிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை உதவி அரசஅதிபர் காரியாலயங்களிலும் தேசிய வீடமைப்புஅபிவிருத்தி அதிகார சபை மாவட்ட அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.(11)

## கிளிநொச்சி எழுச்சி விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவை ஒட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலாசார பிரிவின் கிளிநொச்சி கலாசார அவை நடத்தும் எழுச்சி விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி இன்று 13 ந் திகதி நடைபெறும்.

மாலை 7 மணியளவில் நடைபெறும் இந் நிகழ்ச்சிக்கு கிளிநொச்சி மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.கே. வேலாயுதம் தலைமை வகிப்பார். வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. ஆர் சந்திரன் சிறப்புரையையும் வித்துவான் க.வேலன் பேருரையும் நடத்துவர்.

இதனைத் தொடர்ந்து கம்பன் கழக அமைப்பாளர் சொல்லின் செல்வர் திரு.இ ஜெயராஜ அவர்களின் தலைமையில் பெண் விடுதலை சாதி ஒழிப்பு தேசப் பற்று ஆகிய தலைப்புக்களில் விவாத அரங்கம் இடம்பெறும் இவ் வரங்கில் ஈழத்தின் முன்னணி இலக்கிய சிருஷ்டி கருத்தாக்களும் பேச்சாளர்களும் கலந்து கொள்வார்கள்.

இறுதி நிகழ்ச்சியாககொடூர சங்காரம் அரிச்சந்திர மயான காண்டம்'' என்னும் நாடகங்களுடன் நிருத்தியாஞ்சலி'' என்னும் நடனமும் இடம்பெறும்.(41)

### நாம் எவரையும்..,

செலுத்த புலிகள் அனுமதிக்க மாட்டார்கள்.பிரேமதாசவும் இதே கருத்து நிலைப்பாட்டையே எடுத்தியம்பினர். வெளிநாட்டுத் தலையீட்டுக்கு முடிவு கட்ட அவர் திடசங்கற்பம் எடுத்தார்.

கேள்வி: இப்போது, இந்திய இராணுவம் போய்விட்டது. உங்களது சரித்திர ரீதியான எதிரியான இலங்கை அரசாங்கத்துடன் மோதல் ஏற்படுவது தவிர்க்க முடியாதது எனப் பலர் அஞ்சுகிறுர்கள்?

பதில்: எமது மக்களுக்கெதிரான அரசு அடக்குமுறை விடயத்தில் நாம் ஒரு நீண்ட சரித்திரத்தையே கொண்டிருக்கின்றோம். முன்னதாக, தமிழர்கள் பேச்சுவார்த்தை நடத்தினுர்கள். திரும்பத்திரும்ப ஏமாற்றப்பட்டார்கள். எனவே அதன் பின்னர் தான் ஆயுதப் போராட்டம் பிறந்தது. தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும்எதிராக இலங்கை அரசாங்கம் அடக்குமுறையை நாடுமானுல், நாம் போரிடுவோம். ஆனுல், தற்போதைய அமைதி, சமாதானம் தொடரும் என நாம் நம்புகிறோம்.

கேள்வி: தமிழர்களின் பிரச்சினைகளைத் 'தீர்த்து வைப்பதில், பிரேமதாஸ எவ்வளவு தூரம் அக்கறையாக இருக்கின்றுர் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில்: நம்பிக்கையின் அடிப்படையில் தான் நாம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம் அந்த நம்பிக்கையை நாம் கொண்டிருக்கிறோம்,

கேள்வி: மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றுவதில் புலிகள் எந்தளவு தூரம் அக்கறையாயிருக்கிறுர்கள்?

பதில்: நாம் மிகுந்த அக்கறையுடையவர்களாக இருக்கின்றோம். மக்களின் நம்பகபூர்வமான பிரதிநிதிகள் நாங்களே என்பதை இந்தியாவுக்கும் உலகுக்கும் காட்ட நாம் விரும்புகிறோம்.

கேள்வி: சுதந்திர ஈழத்துக்கான கோரிக்கையை நீங்கள் கைவிட்டு விட்டீர்களா?

பதில்: அதை நாம் கைவிடவில்லை.

கேள்வி: அவ்வாறெனில், பிரேமதாஸவுடன் எதற்காகப் பேசுகிறீர்கள்? உங்களது பிரிவினை இலட்சியத்தில்தொடர்ந்தும் உறுதியாக நின்றுல் எவ்வாறு நீங்கள் ஜனநாயக பொதுவோட்டத்தில் பிரவேசிக்க முடியும்?

பதில்: அரசியல் பொதுவோட்டத்தில் நாம் பிரவேசித்துக் கொண்டிருக்கின்றோம். சுய நிர்ணய உரிமைக்கான எமது கோரிக்கை அரசியல் நிகழ்வுகளில் பிரவேசிக்கும் எங்களது செயல்களுக்குக் குந்தகமாக அமையப்போவதில்லை.

## மிதிவெடி வெடித்து படுகாயர்

பருத்தித்துறை பழைய தபால் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் புதைத்து வைக்கப் பட்டிருந்த மிதிவெடி வெடித்ததில் பருத்தித்துறையைச்சேர்ந்த செல்லத்துரை குணசிங்கம் (39வயது) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.(44)

### பிரபாகரன...

நீதியமைச்சரிடம் முறையிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக பருத்தித்துறை, திருமலை மக்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து பேசுவார்,

வடமராட்சிமக்கள் இந்திய, இலங்கை ராணுவத்தினுல் நீண்ட காலமாக பாதிப்படைந்துள்ளனர். இவர்கள் மீண்டும் சிங்களப் பொலிஸாரினுல் இம்சைப்படுத்துவதை விடுதலைப் புலிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதையும் இச் சந்திப்பின்போது பிரபாகரன் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### மேலும்..

பட்டு வருகின்றது. அரசாங்க நிர்வாக சேவையிலும் பல வேலையில்லா பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள் (03)

### 1990ஆம் ஆண்டு...

6. தொழில் ஆரம்பிக்கும் நேரம் 14-04-90 பகல் 10, 34 முதல் 11-00மணிவரை

7. வீட்டிலிருந்து புறப்படும் நேரம் 14-04-90பகல் 10 34 முதல் 12-00 மணி வரை

இலங்கை அரசின் இந்து கலாசார அமைச்சால் வெளியிடப்பட்ட குறிப்பு இது.

மட்டக்களப்பு வாவியில்

## அலங்கரிக்கப்பட்ட படகில் அன்னை பூபதி உருவப்படம்

பட்டுநகர் வாவியில் அலங்கரிக்சப்பட்ட படகு ஒன்றில் அன்னை பூபதியின் உருவப் படம் வைக்கப்பட்டுள்ளது. இது மட்டு நகருக்கு வரும் பலரது கவனத்தையும் ஈர்த்து வருகின்றது.

இதேவேளை எதிர்வரும் 16, 17, 18, 19, ஆம் திகதிகளில் மட்டு. வெபர் அரங்கில் அன்னை பூபதி நினைவாக பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. 18 ஆம் திகதி கவியரங்கம் இசைவிழா ஆகியன நடைபெறவுள்ளன. இறுதி நாளான 19 ஆம் திகதி பாடும் ஊர்வலம் ஒன்றும் இடம் பெறவுள்ளது. வலையிறவு, கல்முனை அமிர்தகழி, ஏறுவூர் ஆகிய பகுதிகளில் இருந்து மட்டு நகருக்கு ஊர்வலங்கள் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் கோட்டமுனை மைதானத்தில் எழுச்சிக் கூட்டம் ஒன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இத்துடன் அன்றையதினம் எல்லைவீதிக்கு அன்னை பூபதி வீதி எனவும், கருவேப்பங்கேணி வீடமைப்பு திட்டத்திற்கு பூபதி வீடமைப்பு திட்டம் எனவும் பெயர் சூட்டப்படவுள்ளது. (05)

## வல்வையில் உண்ணுவிரதம்

நேற்று வியாழக்கிழமைகாலை முதல் மாலை வரை அன்னை பூபதி நினைவாக வல்வெட்டித் துறை சனசமூக நிலைய முன்பாக சுழற்சிமுறை உண்ணுவிரதம் நடைபெற்றது.

இதில் வல்வெட்டித்துறைச் சுற்றுடலில் வாழும் பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பித்தனர். (22)

### மாகாணசபை...

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன வெளியிட்டார், வடகிழக்கு மாகாண சபை மீண்டும் முதல்வர் வரதராஜப்பெருமாள் தலைமையில் கொழும்பில் நடைபெற அரசு அனுமதி வழங்குமா? எனக்கேட்கப்பட்ட போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பில் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றி கேட்கப்பட்டபோது பேச்சுகள் சுமுகமாக நடைபெறுகிறது, இப் பேச்சுகளின் மூலம் பெருமளவு கசப்பு நிலை நீக்கப்பட்டுள்ளது என அமைச்சர் கூறினுர்.

ஈ. பி, ஆர் எல். எப், உடன் இலங்கை அரசு பேச்சு நடாத்துமா எனக் கேட்ட போது அரசு யாருடனும் பேசத்தயார் ஆனுல் ஈ, பி. ஆர். எல். எப், பத்தொன்பது அம்சக் கோரிக்கையை நிபந்தனையாக முன்வைக்கின்றனர் நிபந்தனைகளுடன் பேச்சுக்களை நடாத்த அரசு தயாராக இல்லை என அமைச்சர் பதிலளித்தார்.

### கொலலப்பட்ட...

உண்ணுவிரதியை சுற்றி ஆதரவாளர்கள் அமர்ந்திருக்க ஒலிபெருக்கியில் பக்திகீதங்கள் இசைத்தவண்ணம் உள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் ஆரம்பமான இந்த உண்ணுவிரதம் இன்று வெள்ளிக்கிழமை மாலை சம்பிரதாய பூர்வமாக முடித்து வைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப் பட்டது, (41)

### ராக்கிங்...

வர்களை மட்டக்களப்பில் பல்கலைக்கழக வளாகங்களுக்கு வெளியே மட்டு, கச்சேரிப் பகுதிகளிலும் நகரின் மத்தியிலும் பழைய மாணவர்கள் ராக்கிங் செய்வதாக தெரிவிக்கப்பட்ட புகாரையடுத்தே விடுதலைப் புலிகள் இவ் அறிவிப்பை விடுத்துள்ளனர். இத்தகைய நடவடிக்கைகளினுல் பொதுமக்கள் கூட பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருக்கின்றது. (05)


'லொறி பொடி அடித்தல்'

**கேள்வி விண்ணப்பம்**

எமது சங்கத்தின் புதிய இசூஸ் லொறிக்குபுதிய உடற்கோப்பு அமைப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது விபரங்களுக்கும் விண்ணப்ப படிவங்களுக்கும் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். உரிய விண்ணப்பங்களை 20.04.90 க்குமுன் பொதுமுகாமையாளர், பல, நோ. கூ. சங்கம்,பூநகரி என்றவிலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலில் தொடர்பு கொள்ள விரும்புவோர் விலாசமிடப்பட்ட கடித உறையுடன் மீளளிக்கப்படாத ரூபா 05/- தபாற் கட்டளை செலுத்தி விண்ணப்படிவங்களை பெற்றுக் கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்:
பூநகரி ப. நோ. கூ. சங்கம்.
பூநகரி.

04147



சித்திரைப் புத்தாண்டே வருக! சிறப்புக்கள் யாவும் தருக!

அனைவருக்கும் எவர்விஷன் ஸ்தாபனத்தாரின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

★ புதிய வருடத்தில் புதிய சலுகை

- உங்கள் இல்லங்களில் நடைபெறும் சகல மங்கல வைபவங்களையும் நவீன வீடியோ கமறு, வீடியோ மிக்ஷர் மூலம் படப்பிடிப்புச் செய்வதில் நிபுணத்துவம் வாய்ந்த சேவையை வழங்கும்

★ எவர் விஷன் ஸ்தாபனத்தினர்

பிறக்கும் புத்தாண்டையொட்டி உங்களுக்கு வழங்கும் புதிய சலுகை

- எமது ஸ்தாபனம் மூலமாக வீடியோபடம் பிடித்துக் கொள்பவர்களுக்கு மேலதிக கட்டணம் எதுவுமின்றி வீடியோ பிரதியொன்றை நீங்கள் குறிப்பிடும் உங்கள் உறவினருக்கு எமது செலவிலேயே அனுப்பிவைக்கின்றோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விபரங்களுக்கு:

**எவர் விஷன்**

21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

04139


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஆ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 13-04-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது